முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2016 யூலை

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

(Financial Accounting and Reporting)

2016-07-16
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தரவும்.***

(3) ***விடைகள்*** *உமக்குத் தரப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு வினா வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***வினா வினைச் சொற்களின்*** *நிரலில் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

இந்தப் பகுதியிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக **வரையறுக்கப்பட்ட B கம்பனியினால்** வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டிய தொகைகளைக் **இனங்காண்க.** :

(a) 2016 மார்ச் 28 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட B கம்பனியிடமிருந்து** 100 அலகு பொருள் **X** இனைக் கொள்வனவு செய்யவுள்ள தமது நோக்கத்தினை **அனில்** என்பவர் கம்பனிக்குத் தெரிவித்தார். ஒரு அலகு **X** இன் விற்பனை விலை ரூ. 500/- எனவும், தற்போது தொக்கிருப்பில் 75 அலகுகள் மாத்திரம் இருப்பதாகவும் எஞ்சியவை இப்போது உற்பத்தி செய்யப்பட்டு வருவதனால் எஞ்சிய 25 அலகுகளையும் இன்னும் இரண்டு வாரங்களில் விநியோகிக்க முடியுமெனவும் கம்பனி **B, அனிலுக்குத்** தெரிவித்தது. **அனில்** முழுத் தொகையான ரூ. 50,000/- இனைச் செலுத்தி 75 அலகுகளை 2016 மார்ச் 30 ஆந் திகதி பெற்றுச் சென்றதுடன், எஞ்சிய 25 அலகுகளைப் பின்னர் பெற்றுக்கொள்ள இணங்கினார். (03 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட B கம்பனி** ஒரு குறிப்பிட்ட மாதாந்தச் சஞ்சிகையினைப் பதிப்பிட்டு, பிரதியொன்று ரூ. 1,000/- விலையில் விற்பனை செய்கின்றது. எனினும், **கம்பனி B** வருடாந்த சந்தாவாக 12 மாதங் களுக்கான பிரதிகளுக்கு ரூ. 10,000/- இனை அறவிடுவதுடன், இந்தத் தொகை முன்னதாகச் செலுத் தப்பட வேண்டும். வாடிக்கையாளர் ஒருவர் தமது வருடச் சந்தாவான ரூ. 10,000/- இனை 2015 செப்ரெம்பர் 01 ஆந் திகதி செலுத்தினார். (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

(a) நிதிக் கூற்றுக்கள் வழக்கமாக, உரிமம் ஒரு தொடர்ந்தியங்கும் தாபனம் (going concern) எனும் எடுகோளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

தொடர்ந்தியங்கும் தாபன எடுகோளினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) பயனுடைய நிதித் தகவலின் அடிப்படைத் தர ரீதியான குணவியல்புகள் இரண்டு (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறு, ஐந்து (05) குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தாளாண்மைகளை (Specified Business Enterprises) **கூறுக.** (05 புள்ளிகள்)

## வினா 04

2012 ஏப்ரல் 01 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட CC கம்பனி** எந்திரமொன்றினை ரூ. 4 மில்லியனுக்குக் கொள்வனவு செய்தது. எந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகவும் ஈற்றுப் பெறுமதி இருக்கமாட்டாதெனவும் மதிப்பிடப்பட்டது. 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின்படி, அந்த எந்திரத்தினை இன்னும் 3 ஆண்டுகளுக்கு பயன்படுத்த முடியும் எனவும் 3 ஆவது ஆண்டின் முடிவில் (அதாவது 2018.03.31 இல்) அதன் ஈற்றுப் பெறுமதி ரூ. 100,000/- ஆக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**கீழ்வருவனவற்றினைக் கணிக்குக.**

(a) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இந்த எந்திரத்தின் தேய்மான அறவீடு

(b) 2016 மார்ச் 31 இல் எந்திரத்தின் முன்கொணரற் பெறுமதி (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

இந்தப் பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

(a) “2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம், இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் சில தேவைப்பாடுகளுக்கு இசைவாக செயற்பட வேண்டும்.”

அத்தகைய தேவைப்பாடுகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) 2015 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான இரண்டு இலாபத்திறன் விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | **2016** | **2015** |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | 36.5% | 38.1% |
| தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாய் (ROCE) | 30.4% | 32.6% |

***நீர் செய்யவேண்டியது,***

கீழ்வரும் ஒவ்வொன்றிற்கும் சாத்தியமான இரண்டு (02) காரணங்கள் **கூறுக** :

(i) மொத்த இலாப விகிதத்தில் வீழ்ச்சி

(ii) தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாயில் (ROCE) வீழ்ச்சி (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(a) ஒமேகா **PLC** ஆனது 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி ஒவ்வொன்றும் ரூ. 10/- ஆன மீட்கப்பட முடியாத 300,000 முன்னுரிமைப் பங்குகளை வழங்கியது. 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது கம்பனி முன்னுரிமைப் பங்கு ஒன்றிற்கு ரூ. 1/- வீதம் பங்கிலாபம் வழங்கியது.

2016 மார்ச் 31 ஆந் திகதியில் **ஒமேகா PLC** யின் நிதிக் கூற்றுக்களில் இந்தப் பங்கு மூலதனமும் அவற்றின் மீதான பங்கிலாபங்களும் எவ்வாறு காட்டப்படும் என்பதனை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) கீழே தரப்பட்டுள்ள உருப்படிகள் **வரையறுக்கப்பட்ட A கம்பனியின்** 2016 மார்ச் 31 ஆந் திகதி நிதிநிலைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன :

(1) ரூ. 8 மில்லியன் முன்கொணரற் பெறுமதியுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

(2) **பெரேரா** என்பவரிடமிருந்து வருமதியாகவுள்ள வியாபார வருமதி மீதி ரூ. 50,000/-

(3) காசு மீதி ரூ. 325,000/-.

(4) வியாபாரத் தொக்கு ரூ. 4 மில்லியன்

(5) இலங்கை வங்கியில் நிலையான வைப்பு ரூ. 1 மில்லியன்

(6) முன்கொணரப்பட்ட (Prepaid) செலவுகள் ரூ. 1.2 மில்லியன்

(7) உப கம்பனியொன்றில் (subsidiary company) பங்குகளில் முதலீடு ரூ. 5 மில்லியன்

***நீர் செய்யவேண்டியது,***

(i) மேற்படி நிரலிலிருந்து நிதிச் சொத்துக்களை **இனங்காண்க.**

(ii) மேலே ஒவ்வொரு உருப்படியையும் நிதிச் சொத்தாகத் தெரிவு செய்வதற்கான காரணத்தைக் **கூறுக.** (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

2015 ஏப்ரல் 01 ஆந் திகதி **பெரோ PLC** ஆனது **வரையறுக்கப்பட்ட சரா கம்பனியின்** 150,000 உரிமையாண்மைப் பங்குகளை ரூ. 3.5 மில்லியனுக்கு கொள்வனவு செய்தது. அந்தத் திகதியில் **வரையறுக் கப்பட்ட சரா கம்பனியின்** இனங்காணக்கூடிய நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பு ரூ. 4.3 மில்லியனாக இருந்தது.

இரு கம்பனிகள் பற்றிய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | **பெரோ PLC (ரூ.)** | **வ/வு சரா (ரூ.)** |
|---|---|---|
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் | 20,000,000 | 2,100,000 |
| 2015 மார்ச் 31 இல் கைக்கொள் இலாபம் | 8,000,000 | 640,000 |
| 2016 மார்ச் 31 இல் கைக்கொள் இலாபம் | 9,200,000 | 960,000 |
| 2016 மார்ச் 31 இல் ஆதனம், பொறி, உபகரணம் (முன்கொணரற் பெறுமதியில்) | 12,000,000 | 4,200,000 |

**பெரோ PLC** மற்றும் **வ/ப சரா கம்பனிகளுக்கு** வேறு ஒதுக்கங்கள் எதுவும் இல்லையெனக் கொள்க. 2015 ஏப்ரல் 1 இல் **சரா கம்பனியின்** ஏட்டுப் பெறுமதியிலிருந்தான நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பில் ஏற்படும் எந்தவொரு மாற்றமும் காணியின் சீர்மதிப்பில் ஏற்படும் மாற்றம் காரணமாக ஏற்பட்டதாகக் கொள்க.

**வரையறுக்கப்பட்ட சரா கம்பனி** வழங்கியுள்ள மொத்த உரிமையாண்மைப் பங்குகளின் எண்ணிக்கை 200,000. **வ/ப சரா கம்பனியின்** 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி பங்கொன்றின் சீர்மதிப்பு ரூ. 20/-.

***நீர் செய்யவேண்டியது,,***

உரிய செயன்முறைகளுடன் கீழ்வருவனவற்றினைக் **கணிக்குக.** :

(a) ஒன்றித்தல் மீதான நன்மதிப்பு

(b) 2016 மார்ச் 31 ஆந் திகதி கட்டுப்பாடற்றோர் பாத்தியதைக் கணக்கு மீதி

(c) 2016 மார்ச் 31 ஆந் திகதியில் ஒன்றித்த கைக்கொள் இலாப (Consolidated Retained Earnings) கணக்கு மீதி

(d) 2016 மார்ச் 31 ஆந் திகதியில் ஒன்றித்த நிதிநிலைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய ஆதனம், பொறி மற்றும் உபகரணப் பெறுமதி (10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

இந்தப் பகுதியிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**லெனின் PLC,** கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்தப்பட்ட கம்பனியாகும். 2016 மார்ச் 31 ஆந் திகதியில் கம்பனியின் பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**லெனின் PLC**
**2016 மார்ச் 31 ஆந் திகதியில் கம்பனியின் பரீட்சை மீதி**

*(ரூ. '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் / மீள்மதிப்பீட்டில் | | |
| காணி | 16,000 | |
| கட்டடம் | 19,000 | |
| விநியோக வாகனங்கள் | 15,000 | |
| தளபாட, இணைப்புகள் | 2,000 | |
| <u>திரள் தேய்மானம் - 2015 ஏப்ரல் 01</u> | | |
| கட்டடம் | | 5,000 |
| விநியோக வாகனங்கள் | | 8,000 |
| தளபாட, இணைப்புகள் | | 500 |
| 2015 ஏப்ரல் 01 இல் தொக்குகள் | 4,000 | |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 24,000 | 49,000 |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 5,000 | 4,000 |
| வியாபார வருமதிகள் (ஐயுறவுக் கடன்) ஏற்பாடு – 2015 ஏப்ரல் 01 இல் | | 200 |
| நிரற்படுத்திய கம்பனிகளில் முதலீடு | 4,000 | |
| வங்கி மீதி | 1,000 | |
| காசுக் கையிருப்பு | 400 | |
| ஏனைய சென்மதிகள் | | 300 |
| நீண்டகால வங்கிக் கடன் | | 8,000 |
| செலுத்திய வருமான வரி | 4,500 | |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் | 600 | |
| IFC நிறுவனத்திற்கான கொடுப்பனவு | 10,000 | |
| நிருவாகச் செலவுகள் | 5,000 | |
| விற்பனை, விநியோகச் செலவுகள் | 3,000 | |
| நிதிச் செலவுகள் | 500 | |
| ஏனைய செலவுகள் | 1,500 | |
| குறிப்பிடு மூலதனம் - 2,000,000 சாதாரண பங்குகள் | | 25,000 |
| மீள்மதிப்பு ஒதுக்கம் | | 2,500 |
| கைக்கொள் இலாபம் - 2015 ஏப்ரல் 01 இல் | | 13,000 |
| | **115,500** | **115,500** |

கீழே தரப்பட்டுள்ள மேலதிகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன :

(1) 2016 மார்ச் 31 இல் கட்டடங்கள் ரூ. 18 மில்லியனாக மீள்மதிப்பு செய்யப்பட்டுள்ளதுடன், கணக்கேடுகளில் உரிய செம்மையாக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(2) 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியில் தளபாட, இணைப்புகள் அந்தத் திகதியில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சில உருப்படிகளை உள்ளடக்கியிருந்தது. அந்தத் தளபாட உருப்படிகளின் கிரயம் ரூ.400,000/-.

(3) 2015 சனவரி 01 ஆந் திகதி ரூ. 2,000,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட **லெனின் PLC** யின் விநியோக வாகனங்களில் ஒன்று 2016 மார்ச் 20 ஆந் திகதி விபத்திற்கு உள்ளானதுடன், அதன் முழுக் காப்புறுதிக் கொடுப்பனவாக ரூ. 500,000/- தொகை 2016 மார்ச் 30 ஆந் திகதி பெறப்பட்டது. இது பலத்த சேதமடைந்ததன் காரணமாக கம்பனி இந்த வாகனத்தினை 2016 மார்ச் 31 இல் ரூ. 1,000,000/-க்கு விற்பனை செய்தது. இந்த விற்பனையினால் பெற்ற தொகையும் பெறப்பட்ட காப்புறுதித் தொகையும் வங்கிக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டு விற்பனைக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டன. அவை தவிர வேறெந்த பதிவுகளும் இது தொடர்பில் மேற்கொள்ளப்படவில்லை.

(4) தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் அல்லது மீள்மதிப்புத் தொகையில் கணிக்கப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகளின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 20 ஆண்டுகள் |
| விநியோக வாகனங்கள் | : | 10 ஆண்டுகள் |
| தளபாட, இணைப்புகள் | : | 5 ஆண்டுகள் |

(5) இந்த ஆண்டின்போது **லெனின் PLC** ஆனது கம்பனியில் பயன்படுத்த வேண்டிய மாற்று IT முறைமை ஒன்றினைக் கண்டுபிடிக்கும் நோக்கில் ஆராய்ச்சி நிறுவனமான **IFC நிறுவகத்திற்கு** ஆராய்ச்சி, அபிவிருத்திச் செலவாக ரூ. 10,000,000/- இனை செலுத்தியது. இந்தத் தொகை பரீட்சை மீதியில் **IFC நிறுவனத்திற்கான** கொடுப்பனவின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

(6) 2016 மார்ச் 31 இல் முதலீடுகளின் சீர்மதிப்பு ரூ. 4.5 மில்லியன்.

(7) நீண்டகால வங்கிக் கடன் மீது அட்டுறுவாகவுள்ள வட்டி ரூ. 50,000/- கணக்கிற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. 2016 மார்ச் 31 இல் நிலுவையிலுள்ள இந்தக் கடன் மீதியின் ¼ பங்கு அடுத்த ஆண்டில் செலுத்தப்பட வேண்டியதாகும்.

(8) 2015 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகள் ஐயுறவுக் கணக்கு ஏற்பாட்டு மீதி கீழ்வருமாறு அமைந்துள்ளது :

| | **ரூ.** |
|---|---|
| வாடிக்கையாளர் **மீராவிடமிருந்து** வருமதியான தொகை | 55,000 |
| பொது ஏற்பாடு | 145,000 |
| | **200,000** |

**மீராவிடமிருந்து** வருமதியாகவுள்ள தொகை இப்போது அறவிட முடியாததாக தெரிய வந்துள்ளதுடன் பதிவழிக்கப்பட வேண்டியுள்ளது.

இன்னொரு வியாபார வருமதியாளர் மீதியான ரூ. 85,000/- தொகையும் அறவிட முடியாததாக பதிவழிக்கப்படல் வேண்டும். ஆண்டின் இறுதியில் நிலுவையாக உள்ள வியாபார வருமதியாளர் மீதியன் 5% பொது ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(9) 2016 மார்ச் 31 இல் இறுதித் தொக்கு ரூ. 5,000,000/-.

(10) 2015/16 வரிமதிப்பாண்டிற்கான வருமான வரி ரூ. 5.1 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. வரிமதிப்பாண்டு 2014/15 தொடர்பில் வருமான வரிக் குறையேற்பாடு ரூ. 500,000/- ஆகக் காணப்பட்டது. வரிமதிப்பாண்டு 2015/16 இல் செலுத்தப்பட்ட வருமான வரி, முன்னைய ஆண்டின் குறைமதிப்பீட்டுக் கொடுப்பனவையும் உள்ளடக்குகின்றது.

(11) நிதிக் கூற்றுக்கள் வழங்குவதற்காக பணிப்பாளர் சபையினால் 2016 யூன் 20 ஆந் திகதி அங்கீகரிக் கப்பட்டது.

***நீர் செய்யவேண்டியது,***

**லெனின் PLC** இற்காக, வெளியீட்டிற்கான பொருத்தமான வடிவில் (in a form suitable) பின்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (08 புள்ளிகள்)

(b) 2016 மார்ச் 31 ஆந் திகதியின்படி, நிதிநிலைக் கூற்று. (08 புள்ளிகள்)

(c) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (03 புள்ளிகள்)

(d) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் பெறுமதி மாற்றங்களைக் காட்டும் கூற்று (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

**வரையறுக்கப்பட்ட MCS கம்பனியின்** 2016 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 ஆகிய திகதிகளில் நிதிநிலைக் கூற்றுக்களும் 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட MCS கம்பனி**

**நிதிநிலைக் கூற்று** *(ரூ.'000)*

| | **2016 மார்ச் 31 இல்** | **2015 மார்ச் 31 இல்** |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 12,000 | 7,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 8,150 | 6,250 |
| வியாபார வருமதிகள் | 2,000 | 1,400 |
| முற்கொடுப்பனவுகள் | 700 | 200 |
| காசும் காசுச் சமானங்களும் | 1,800 | 3,450 |
| | **12,650** | **11,300** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **24,650** | **18,300** |
| **உரிமையாண்மையும் பரிப்புகளும்** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் – சாதாரண பங்கு மூலதனம் | 5,000 | 5,000 |
| மீள்மதிப்பு ஒதுக்கம் | 2,500 | 2,000 |
| கைக்கொள் இலாபம் | 6,150 | 3,150 |
| **மொத்த உரிமையாண்மை** | **13,650** | **10,150** |
| **நடைமுறையல்லாப் பரிப்புகள் :** | | |
| வட்டி செலுத்தப்படும் கடன்கள் | 7,000 | 5,000 |
| **நடைமுறைப் பரிப்புகள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 2,300 | 2,050 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 400 | 200 |
| அட்டுறு செலவுகள் | 1,000 | 750 |
| வங்கி மேலதிகப் பற்று | 300 | 150 |
| | **4,000** | **3,150** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புகளும்** | **24,650** | **18,300** |

**வரையறுக்கப்பட்ட MCS கம்பனி**

**2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று**

| | **ரூ.'000** |
|---|---|
| விற்பனைகள் | 12,000 |
| விற்பனைக் கிரயம் | (5,000) |
| **மொத்த இலாபம்** | **7,000** |
| விநியோகச் செலவுகள் | (900) |
| நிருவாகச் செலவுகள் | (1,500) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | **4,600** |
| நிதிச் செலவுகள் | (600) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **4,000** |
| வருமான வரி | (1,000) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **3,000** |
| பிற முற்றடக்க வருமானம் | 500 |
| **ஆண்டிற்கான மொத்த முற்றடக்க வருமானம்** | **3,500** |

மேலதிகத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

(1) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தேய்மானம் ரூ. 1,000,000 நிருவாகச் செலவில் உட்படுத்தப்பட்டுள்ளது.

(2) மீள்மதிப்பு ஒதுக்கத்தில் அதிகரிப்பானது 2016 மார்ச் 31 ஆந் திகதி காணியின் மீள்மதிப்பீட்டின் காரணமாக ஏற்பட்டதாகும்.

(3) ரூ. 400,000/- இனை கிரயமாகவும் விற்பனைத் திகதியில் ரூ. 80,000/- இனை முன்கொணரற் பெறுமதி யாகவும் கொண்ட அலுவலக உபகரணமொன்று இந்த ஆண்டின்போது ரூ. 30,000/- க்கு விற்பனை செய்யப்பட்டது.

(4) 2015 மார்ச் 31 ஆந் திகதிக்கான தொழிற்பாட்டு இலாபமும் விற்பனையும் முறையே ரூ. 5,200,000/- உம் ரூ. 13,500,000/- உம் ஆகும்.

(5) 2014 மார்ச் 31 ஆந் திகதி மொத்தச் சொத்துக்கள் ரூ. 15,750,000/- ஆகும்.

**நீர் செய்யவேண்டியது,**

(a) நேரில் முறையைப் பயன்படுத்தி 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட MCS இன்** காசுப்பாய்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (15 புள்ளிகள்)

(b) 2015 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கு வ/வு **MCS கம்பனியின்** கீழ்வரும் விகிதங்களைக் **கணிக்குக.**

(i) மொத்த இலாப விகிதம் (2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு மாத்திரம்)

(ii) நிகர இலாப வீதம் (2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு மாத்திரம்)

(iii) சொத்துப் புரள்வு வீதம்

(iv) நடப்பு விகிதம் (Current Ratio)

(v) விரைவுச் சொத்து விகிதம் (Quick Assets Ratio) (10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |